Regional Engineering College

*480 Q.— THIRU R.R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(a) whether the Government are aware of the recommendation of the Jai Kishaan Committee for taking over the Regional Engineering College in this State by the Central Government ; and

(b) if so, th edetails thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்த வட்டாரப் பொறியியல் கல்லூரியை எடுத்து நடத்தாவிட்டாலும், இதற்கான மானியத்தைக் கொடுக்க மத்திய அரசு ஏதாவது யோசனை தெரிவித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இந்த ரீஜினல் இன்ஜினிரிங் கல்லூரியைப் பொறுத்த வரையில் 50 சதவீதம் மத்திய அரசு தருகிறது. 50 சதவீதம் மாநில அரசு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. இதே நிலை நீடிக்கவேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது.

Training Programmes by Industrial Liaison Board

*481 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism with reference to question No. 51 answered on 7-8-1973 be pleased to state :

(a) whether any training programmes in industry for students, fresh graduates and diploma holders and teachers of technical institutions have been arranged and recommended in Coimbatore district by the Industrial Liaison Board ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.